

# திறவுகோல்

2056\ஆனி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# பேரம் பேசி வாங்குகிறார்கள்

வாடி விடுகிறது
கீரை

தினமும் கதிரவன்
அழித்து அழித்து வரைகிறது
நிழலோவியம்

மூளும் சண்டை
போர்க்களம் ஆகிறது
கழுவும் பாத்திரம்

மகளுக்காக
தாய் கற்கிறாள்
சைகை மொழியை

புதரில் சிக்கிய மீன்கள்
நீந்துகின்றன
நீரில் பிம்பம்

வட்டத்திற்குள்
சுற்றிச்சுற்றி பசியாற்றுகிறது
நிலாச்சோறு

சிறிது நேரம்
உறங்கிக் கொள்கிறேன்
போட்டித் தேர்வுகள்

கடலுக்குள் சென்றவர்
வீடு திரும்பவில்லை
துடிக்கிறது கரையில் மீன்

உள்ளூர்வாசிதான்
வழிச் சொல்லத் தெரியவில்லை
நூலகத்திற்கு

தலைகளை சீவ சீவ
கூடிவிடுகிறது கூட்டம்
இளநீர் வியாபாரம்

வாசிக்கிறது குழந்தை
அகம் மகிழ்கிறார் இரண்டாம் தாய்
ஆசிரியர்

பேரதிர்ச்சியான செய்தி
ஒன்றும் செய்துவிடவில்லை
குழந்தையை

நினைவுகளற்ற நதியில்
விளையாட்டு பொம்மையாக்கி
விடுகிறது
முதுமை

உணவளித்ததும்
கவிதைகளை பரிசளிக்கின்றன
பறவைகள்

மக்கள் வெள்ளத்தில்
மெள்ள மிதக்கிறது
தேர்

- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001



# வெயிலை பார்த்துவிட்டு

ஒதுங்கினேன்
நிழல் அரவணைத்தது

மழையை பார்த்துவிட்டு
ஒதுங்கினேன்
குடிசை வீடுஅரவணைத்தது

கடலலையை பார்த்துவிட்டு
ஒதுங்கினேன்
கரைகள் இடம்தந்தது

காலத்தை பார்த்துவிட்டு
ஒதுங்கினேன்
ஏளனமாய் சிரித்தது

சாலையில் பரிதவித்த
மூதாட்டியை பார்த்துவிட்டு
ஒதுங்கினேன்
நீயும் மனிதனா என்றது...?

ஒதுங்க நேரும்போது
உனக்கு இடம் தந்தது
ஒதுங்கி போகும்போது
உன்னையே ஒதுக்கிவைக்கிறது
சமூகம்...

## உதிர்ந்திடும் பூக்களில்

என்ன உண்டோ?
இதழோடு இதழாக
அள்ளியெடுத்து சேர்க்கிறாய்
இதழாக நானிருக்க
ஆசைப்பட்டேன்
வரமொன்றுகொடுப்பாயா?

மேகத்தில் ஊர்ந்திடும்
வெண்ணிலவே
இரவுகள் மட்டும்
சிரிக்கின்றன
அப்பிய இருளில்
அசைந்தாடுகிறாய் நீ...!

நின்முகம் பார்த்திட
குளமொன்று ஏங்கிட
தொட்டணைத்து அசைகிறாய்
இரவெல்லாம் பூக்கிறதே
குளமெல்லாம்குலுங்கியதே....!

ஏதேதோ செய்கிறாய்....!
என்முன்னே நகர்கிறாய்
பனிவிழும் பொழுதினில்
குழி விழும் கண்ணத்தில்
குட்டிக் குட்டிப் புன்னகையில்
விழச்செய்கிறாய்
மதியற்று நனைகிறேன்....!

ஆடைகட்டிய பூவும்
விழத்தொடங்கியதே
அசைந்திடும் காற்றில்
இதழ்களை உதிர்க்கிறதே
மெல்ல வாய்திறந்து
உன்னோடு பேசிடவே....!

தரையினில் வீழ்ந்து
மணங்களை உதிர்த்து
மெல்லுடலை
ரணமாக்கிய பூவிதழ்கள்
சென்றடைகிறதே
நின் பாதம்...

பாதம்தொட்ட மலர்கள்
கேசத்தில் ஒதுங்கி
கருங்குழல் கூந்தலை
மயக்கியதே..
மயங்கும் வண்டினமும்
குதிக்கிறதே தேனுண்டு...!

வார்த்தையில்
சொல்லாமல்
கண்ணிமைத்து
விழிமூடிய கயல்விழியே....!
நின் கை பிடித்து
நான் நடக்கும்
கடைவீதியும்
கனவினில் தான்
அறங்கேறியதே...!

விழி நனைத்து
நடக்கிறேன்
விழிகொடுத்து
உயிர்த்தெழுவாய்
வழிதிறந்து ஒளியிடு
நெஞ்சத்தில் தங்கிடு...!
திறக்கட்டும் ஒலியெழுப்பி
இதயக்கோயில்கள்...!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.



தோற்றம்:
07.10.1950

மறைவு:
10.06.2025

## ஆழ்ந்த இரங்கல்கள்!

ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்

மன்னை தம்பி (எ) கவிஞர்
**எம். என். பாஸ்கரன்** அவர்கள்
உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இன்று (10.06.2025) காலை 9.30 மணி அளவில் சென்னையில் காலமானார்.

–

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்...

திறவுகோல் மின்னிதழ்,
மன்னார்குடி.

# தவம் (புலனடக்கல்)

பா வகை: நேரிசை
ஒத்தாழிசைக் கலிப்பா

*தரவு*

புலனடக்கல் வழியுடனே புவியினிலே
நிலைத்திடுவோம்
நலத்துடனே வாழ்ந்திடவே நலமாகும்
வாழ்க்கையுமே
உலகமெலாம் பயன்பெறவே
உடலினையும் அடக்கிடுவீர்!

*தாழிசை*

1) மயக்குகின்ற உலகினிலே
மயங்குவதோ வழிதானோ?
பயன்பெறவே பிறந்திருப்போம்
பாங்கெனவே வாழ்ந்திடுவோம்.

2) விருப்பமெலாம் நிறைந்திருக்கும்
வியப்புடனே வாழ்விருக்கும்
இருப்பதனை ஏற்றிடவே இயல்பென்றே
வாழ்ந்திடுவோம்

3) சிறப்புடனே சிந்தையிலே
சிறப்புடனாய் வாழ்ந்திடுவோம்
அறத்துடனே உலகமெலாம்
அனைத்தையுமே வென்றுடுவோம்.

*ஆதலினால்,* (தனிச்சொல்)

*சுரிதகம்*

நலமுடன் வாழ்ந்திடு நல்லோர் வழியில்
உலகமே போற்றும் உயர்வாய்
இலவமாய் நெஞ்சம் இயல்பென
வேண்டுமே!



— வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.

# ஒரு நாளைக்கு

ஒரு முறையாவது
பேசிட வேண்டும்,
ஒரு நாளைக்கு
ஒரு முறையாவது
பார்த்திட வேண்டும்,
ஒரு நாளைக்கு
ஒரு முறையாவது கைகோர்த்து நடந்திட
வேண்டும்,
ஒரு நாளைக்கு
ஒரு முறையாவது
உன்னைப் பற்றி எழுதிட வேண்டும்...
ஒரு நாளைக்கு
ஒரு சிறு சண்டையாவது
போட்டிட வேண்டும்,
உன்னோடு இருக்கும் போதெல்லாம்
ஒரு நாளில் தீராத
நிமிடங்கள் வேண்டும்!

—

மு. முபாரக்,
திருச்சி.

போதாதென்பதே...

செலவே ஆகப் போவதில்லை
சேமித்து என்ன பயன்

செல்வம் என்று நினைப்பீரோ
செழிப்பு அழிவதாய் தவிப்பீரோ

கொடுத்தால் குறையப்போவதில்லை

கொடும் பஞ்சம் வரப்போவதில்லை

அழுத்தங்களின் ஆதிக்கம்
வருத்தங்களின் வாள்வீச்சு

அதிகரித்த முரண்நோக்கு
ஒத்திசைவின்றிய ஒப்புரவு

நெகிழ்விலா நிந்தனை
நானென்ற நெறிபிறழ்வு

இதயத்தை மூடுவதேன்
இதந்தனைத் தடுப்பதுமேன்

சொற்களுக்கேன் பெரும்பஞ்சம்?
சிறு அன்பில் ஏன் வறுமை?

போதுமென்பது அன்பிலில்லை
போதாதென்பதே சொல்லிலெனல்லை

## தூய்மையின் ஈரம்

நேசம் என்பது
விட்டுக்கொடுத்தல்

நேசம் என்பது
இறகால் நீவி விடல்

நேசம் என்பது
சிறகுகள் தருதல்

நேசம் என்பது
தூய்மையின் ஈரம்

நேசம் என்பது
கொண்டாடுதலின் பூக்கள்

நேசம் என்பது
சுவடுகளைப் பத்திரப்படுத்துதல்

நேசம் என்பது
ஆன்மாவை ஆட்டும் மெல்லிசை

வெற்றி என்ற சொல்லுக்கு இடமே
இல்லை நேசத்தில்!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# ஊஞ்சல் தவம்

வாசலில் கிடக்கும்
பழுத்த இலையை
கவனிக்கிறேன்
புரண்டு விட முயலாத
முக்தி அதற்கு

கண் மூடி படுத்திருக்கும்
நாயைப் பார்க்கிறேன்
நகர்ந்து விட வேண்டாத
இசை அதன் நெற்றியில்

திண்ணைக் கிழவிக்கு
திசை இல்லை
சுவற்றோவியமோ
வெற்றிலை குதப்பி
குழப்புகிறாள்

நொடியில் நகர்ந்த
மேக நிழலும்
யாகம் தான் போல
வானம் சாட்சி

முன் பின் ஆட்டத்தை
அணைக்கிறேன்
புத்த சிலைக்கு பக்கத்தில்
ஒரு ஊஞ்சல் தவம்

## குத்துக்கல்லாய் அமர்ந்து விட்டேன்

கவிதை மனதை இழுத்து மூடினேன்
ஓவியம் சிற்பம் ஒன்றுக்கும்
நான் உதவவில்லை
எழுதுகோலை தூக்கி எறிந்தேன்
ஒளி பற்றிய உன்னதம் சன்னதம்
உளறல் இல்லை
புனைவுகளைப் பந்தாடினேன்
வீசும் காற்றுக்கு
நான் பொருட்டாயில்லை
மாயங்களை நகர்த்தி வைத்தேன்
மனதினில் துளி சத்தம் இல்லை
வண்ணங்களை விட்டெறிந்தேன்
வானத்தில் புத்தம் இல்லை
சுற்றும் பூமியை தள்ளி விட்டேன்
ஆதி அந்தம் நினைவில் இல்லை
குத்துக்கல்லாய் அமர்ந்து விட்டேன்
ஆன்மா ஞானம் முனகல் இல்லை

## துறவறம் பூண்ட உலக ஒட்டை

நெடு வானத்தில்
புது வீதி காண்கிறேன்
நேர்நிறை நிதானத்தில்
நீலமேகம் பொன்மாலை
பக்கவாட்டு சறுக்கலில்
பாதி தூரம் பளிச்
மீதிக்கு கரும்பூனைக் கண்கள்
வேர் பூக்கும் சிந்தனைக்கு
நட்சத்திரப் பூக்கள் சாட்டலாம்
சிந்தும் சித்திர இரவதற்கு
சின்ன நடை
ச்சில் சிலிர்ப்பு
அதிகாலை அத்துவானம்
அறிவூறும் ஆழ் யாகம்
அப்படி அவ்வாறே
துறவறம் பூண்ட உலக ஒட்டை

ஒய்யார கற்றலில்
கற்றல் தொடரும்
காற்றின் வழி தான்
கடல் தாண்டவும்
அசைந்து அதிரும்
ஆசை உதிரும்
அப்படியே அம்மட்டும்
இன்னும் சில வரிகள்
நினைத்தது தான்
என்றோ மறந்ததும் தான்
நீள் பிறைக்கு நடுவே
நில்லாமல் நீந்தியதும் தான்...!

— கவிஜி

---

# நடுத்தெரு ஆட்டம்

## ஐஸ்வண்டி

அதோபாரு தெருவிலே
ஐஸ்வண்டி போகுது
அவசியமா வாங்கித்தின்ன
ஆசை நெஞ்சை உசுப்புது

கையில் காசு இல்லையே
கடன் கேட்க தயங்குது
கம்புசோளப்  பானைக்குள்ளே
கைகள் தேடி துழாவுது

எதுவுமில்லை பழங்கலத்தில்
ஏக்கம் தொண்டை அடைக்குது
மாடி வீட்டு அக்கா தின்னும்
மஞ்சள் ஐஸ் அழைக்குது

வாசல் வந்து பார்க்கும்போது
வண்டிதூரம் போகுது
சோகமுகம் கண்டஆயா
சுருக்குப்பைத் திறக்குது

ஐஸ் வாங்கித் தின்பதற்கு
ஐந்து ரூபாய் கிடைச்சது
காசு தந்த ஆயாவிற்கு
கப்ஐஸ் வாங்கிடு

குச்சி ஐஸ் தின்னலாம்
கோன் ஐஸ் தின்னலாம்
சட்டையில ஒழுகும் முன்னே
சப்பிசப்பி உறிஞ்சலாம்

நாக்கெல்லாம் வண்ணமாகும்
நண்பனிடம் காட்டலாம்
நண்பனுக்கும் வாங்கித்தந்து
நட்பின்சிகரம் ஏறலாம்.

## நிலாவே வா!

நிலாநிலா வாவா
நிறைமதியே மெல்லவா
நீதிநெறி சொல்லவா
நியாங்களை வெல்லவா

மழையைப் பூவாய் தூவிவா
மலையில் பசுமை செய்துவா
மரஞ் செடிகள் தழைக்கவா
மாசுகளை ஒழிக்கவா

போட்டி நிறைந்த உலகிலே
பொறுமையில்லை வாழ்விலே
ஆசைப்பேயின் காலிலே
அடிமைகளாய் மனிதரே

ஈகையறம் பரப்பவா
இரக்கம் கருணை சிறக்கவா
அனைவரையும் மீட்கவா
அருள் ஒளியால் காக்காவா

சோகங்களைப் போக்கவா
சொந்தங்களைச் சேர்க்கவா
வறுமைதனை துறத்தவா
வளங்களையே கொழிக்கவா

பெண்கள் புகழ்போற்றவா
பேதைமைகள் ஓட்டாவா
மனிதநேயம் உணர்த்தவா
மறுமலர்ச்சி பிறக்கவா

முயற்சிகளால் உயர்த்தவா
மூலதனம் செழிக்கவா
மூடத்தனம் ஒழிக்கவா
முன்னேற்றம் கொடுக்கவா

ஏழைகளைக் காக்கவா
ஏற்றத்தாழ்வு அழிக்கவா
நம்பிக்கையை விதைக்கவா
நல்லொழுக்கம் நிறைக்கவா

## கண்ணாமூச்சி

ஓடிவாடி தங்கச்சி
ஒளிந்தாடலாம் கண்ணாமூச்சி
கண்டுபிடிப்பது யாருடி?
கண்ணைமூடி தேடுடி!

மூட்டைப்பின்னால் ஒளியலாம்
மூஞ்செலியை விரட்டலாம்
கட்டில்கீழே மறையலாம்
கட்டிவெல்லம் ருசிக்கலாம்

சமையலறையில் ஒளியாதே
சட்டிப்பானையை உருட்டாதே
முற்றத்தூணில் பதுங்கவோடி
முட்டிமோதி அழுவாதே

தொம்பைசந்தில் நுழையும்போது
தூங்கும்பூனை சீரலாம்
கொல்லைபுறக் கிணற்றின்பின்னே
கொசுக்கடித்து ஊறலாம்

கொலுசொலியின் சத்தங்கொண்டு
குறிவைத்துப் பிடித்திடு
சிணுங்கும்வளை ஓசைகேட்டுச்
சீக்கிரம்போய் தொட்டிடு

கையும்காலும் கண்களாகி
காற்றின்வெளியில் துழாவிடும்
இருட்டினச்சம் மாயமாகி
இன்பம்பாலாய் பொங்கிடும்

கண்ணாமூச்சி ஆட்டமாடி
கண்களருமை உணர்ந்திடு
கண்களின்றி வாழ்ந்திடுவார்
சிரமங்களில் உதவிடு!

## எக்கா எக்கா ஏலக்கா

எக்கா எக்கா ஏலக்கா
எழுந்து நின்னா சோளக்கா

சொக்கா போட்ட வாழைக்கா
சொத்தை இல்லா பாவக்கா
விக்க வைக்கும் புளியங்கா
விருந்து போடும் வெள்ளரிக்கா
வெள்ளைமுத்து வெண்டைக்கா
வெட்கப்படும் கோவைக்கா
கொத்துக்கொத்தா அவரைக்கா
குண்டுவயிறு பூசிணிக்கா
முக்கா டவுசர் பேரிக்கா
மூக்கொழுவும் முந்திரிக்கா
நீலம்போட்ட கத்திரிக்கா
நீண்டமூக்குப் பீர்க்கங்கா
நெட்டை வாலு பொடலங்கா
நெத்திச் சுட்டி சுண்டைக்கா
கோலிகுண்டு நெல்லிக்கா
குழம்பில் போட்டு ஆக்குக்கா
கும்பல்கூடி தின்னுக்காவ
குட்டிக்கரணம் போடுக்கா!

## எங்கள் பள்ளி

அழுக்குச்சொக்காய் தம்பி
அழுகையேண்டா தேம்பி
ஒழுகும் மூக்கைச் சிந்துடா
ஒழுங்காய் தலையைச் சீவுடா

முகத்தை நீரால் கழுவிக்கோ
முல்லைப்பூப்பொல் சிரிச்சிக்கோ
என்னவேண்டும் சொல்லுடா
இந்தாமிட்டாய் தின்னுடா

எனக்குநிறைய நண்பர்கள்
இருக்கிறார்கள் பள்ளியில்
என்னுடனே சேர்ந்துவா
எல்லோரையும் காட்டுறேன்

பாடங்களைப் படிக்கலாம்
பாட்டுப்பாடி களிக்களாம்
ஓடியாடி மகிழலாம்
ஒன்னுகூடி பழகலாம்.

--

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.



## குறுங்கவிதைகள்

பனியன் முழுவதும் கிழிசல்
நூல் மூட்டைச் சுமக்கும்
தொழிலாளி !

----

காய்ந்து போன செடி
நல்ல மழை
கை நிறைய கனிகள்

--

இரா. மதிராஜ்,
DME, MBA,
அலப்பட்சாக் கவுண்டன் புதூர்,
காங்கேயம்.

# தனிப்புழு

எனது நேற்றினை நான்
எப்பொழுதும்
நினைவில் விதைத்துக் கொண்டே
இருக்க நினைப்பது இல்லை

அன்று மழை பெய்திருக்கலாம்
வெயில் சிரித்திருக்கலாம்
ஒரே ஒரு துளிமட்டும்
உலகையே நனைத்திருக்கலாம்

நான் அழ நினைப்பதா
புன்னகைக்க நினைப்பதா
அவளோடு மட்டும்தான்
நினைவுகளை நகர்த்த நினைக்கிறேன்

இன்னும் சற்றுநேரத்தில்
இறக்கைகளை விரிக்க தயாராகும்
பல நாள் கூட்டுப் புழுபோல்
என்னை கரம் இருக்கி
அனைத்துறங்க தோன்றுகிறது
சிறு விரல் நீட்டி நாளையை
காண்பிக்கும் கரமொன்றுடன் தான்
எனது பயணங்கள்

நேற்று நேற்றோடு
இருளில் முழ்கிப் போக நானும்
இறகினை விரிக்க தயாராகிறேன்
மனக்கூட்டில்
சிறு மனித புழுவாய் இருந்த்தை
மறந்து.....

## வெறும் செருப்பு

அப்பாவிற்கு நன்றாக தெரியும்
வெயிலில் நான் நடந்தால் சுடுமென
தோளில் என்னை
தூக்கி நடக்கும் அப்பாவிற்கு
அவரின் பாதங்கள் நோவினை
அறிந்த்தேயில்லை
ஆனாலும் நான் கேட்கும் போதெல்லாம்
அவர் சொல்வதெல்லாம்
வெறும் வெயில்தானேயப்பா என்று
இறங்கியது
கையில் எடுத்து தூரமெறிந்தேன்
எனது செருப்பை
அப்பா என்னிடம் கேட்டார் ஏனென்று
நானோ வெறும் செருப்புதானேப்பா
என்றேன்...
பாதங்கள் நடைபோட்டன
நம்பிக்கையிலும் அன்பிலும்...

## நிழல் பிடித்து இறுக்குகிறது என்னை..

யாரும் என்னிடம்
அவ்வளவு எளிதாக
நெருங்கிவடுவதில்லை....

மதில் மேல் நிற்கும் பூனையின்
திசை வேண்டுமென்றால்
அறியாமல் இருக்கலாம்
பயம் நன்றாகவே அறியக்கூடும்
பல ஆண்களுக்கு...

சாறு இறங்கிய கரும்புச் சக்கையை
ஆசையில் மொய்த்து விடைபெறும்
ஈக்களின் சிறு ருசியாகத்தான்
இருக்கிறது
திருப்தியடையாத ஆசையின் சக்கை
நுனிகள்...

தும்பிக்கையுயர்த்திய

யானையின் பிளிருதலின்
பிறகு
காலில் ஏறிச் செல்கிறது
கர்வம் கொண்ட எறும்புகளின் கூட்டம்
மடல்களை மூடியவாறு பின்னோக்கி
நகர்கிறது
செவியடையத்த நிழலாய் களிறு...

அடைவைக்க தவறிய
முட்டைகளெல்லாம்
மகனின் பசிக்கு இரையானது
பரவாயில்லை அடுத்த பருவமென
மென்று தின்ன இயலாமல்
கொத்தி தின்கிறது கோழி
தயக்கத்தில் வீசிய தானியங்களை.....

இப்படியெல்லாம் யாரும்
நெருங்கிவிட முடியாது
நிழல் பிடித்து இறுக்கிய
என்னை....

## அந்த வண்ணம் எனக்கு ரொம்ப பிடிக்கும்

அதற்கும் என்னை பிடித்திருந்த்து
அவ்வப்போது நான்
அதனை பூசிக்கொண்டேன்
பிடித்த இடமெல்லாம் பூசி சந்தோசம்
கொண்டேன்

ஒருநாள் வண்ணம் தீர்ந்துபோனது
எனது அழகிய யாராலும்
நிறுத்த இயலவில்லை
அம்மாவும் சொன்னார்
அப்பாவும் சொன்னார்
அண்ணனும் தேடி அலைந்தார்
கடைசியாக தேடியலைந்து



இடறிவிழுந்தேன் நான்
கட்டை விரல் இடித்து சிதறியது குருதி
எங்கும் கிடைக்காத வண்ணமென
சிந்திய வண்ணத்தை நீருற்றி கழுவிவிட்டு
வண்ணத்தை தேடுவதை களைந்துவிட்டு
சென்றேன்.

ஆனாலும் பிடித்திருந்த்து
என்னை விட்டு பிரியாத வண்ணமதனை
மீண்டும் வழிந்தோடிய செந்நிற
குருதியகுருதியினை..

## எனது வெட்டவெளிகளில்

நிரவாணக் கொட்டகையொன்று
நீ வந்தமரலாம்
வாசல் வரை வந்து திரும்பலாம்

ஆடைகள் கிழிந்த நேரத்தில்தான்
கொட்டகை சரியத்தொடங்கியது
திறனான தொடை பெருத்த கால்கள்
நடுங்க ஆரம்பித்தன

இயில்பினும் இயல்பான
எனது நிர்வாணத்தின் மேனி சற்று
குளிர்ந்தும் வெப்பமேறியும்
சலனமுற ஆரம்பித்தது

தாகம் தீர்ந்தவுடன்
கருத்துக்களை நிரப்பி செல்கிறது காகம்

குழந்தையை ஏந்தியவுடன்
கண்ணீர் சிந்துகிறது
மலட்டு மேகம்

- சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.

# பூட்டிய இதயம்

இது வேண்டாம்
அது வேண்டும்

கருத்து ஏற்கதக்கது
கருத்தில் முரண்படுகிறேன்

இது சாத்தியம்
அது கடினம்

இந்த உதவி செய்ய முடியும்
அந்த உதவி செய்ய முடியாது

இந்த குழப்பத்துக்கு தெளிவு
கொடுங்கள்

என்ற உள்ளத்து உணர்வுகளை
உதட்டு மொழி பகிரவில்லை
எனில்

பூட்டிய இதயத்தை
யாரால் அறிய முடியும்?

## முடிவு எடுப்பவராய்

கடந்தவைகளிலிருந்து

அத்தனை
உவகைகளை
சாதனைகளை
வியப்புகளை
அனுபவங்களை

இழப்புகளை
சோகங்களை

ஏமாற்றங்களையும்

சேமிக்க வாய்ப்பு இல்லை
எனினும்

முன்னதில்
நம்பிக்கை கொடுக்கவும்

பின்னதில்
கவனம் செலுத்தவும்

சிலவற்றை மட்டும்
தெரிவு செய்து
மூளையின் ஞாபக அடுக்குகளில் சேமிக்க
முடிவு எடுப்பது
மனது
செய்து முடிப்பது
புத்தி

## மாறுபட்ட

கருத்து மோதலில்
கேட்டவைகளுக்கு
பதில் தெரியாமால்
அமைதி

தெரிந்தாலும்
பிரிவு வந்து விடக்கூடாதே
என அமைதி

முயற்சிகள்
தோல்வியாகையில்
பெரும் குரலெடுத்து
புலம்பல்

செய்கைகள்

சாதகம் ஆகையில்
சாதிச்சுட்டேன்
என சப்தம் எழுப்பி
ஆர்ப்பாட்டம்

பணியாற்றும்
போது
நீ அதை செய்
நான் இதை செய்கிறேன்
என வரிசை கட்டி
வாய்மொழி

செயலற்ற பொழுதுகளில்
இதை எல்லாம்
செய்யணும்
அதை எல்லாம்
செய்ய சொல்லணும்
என உள்ளுக்குள்ளேயே
செயல் அட்டவணை

## நமக்குள்ளே...

காலையில் இருந்து
மாலை வரை

செய்து முடித்த
பணியின் 'சந்தோஷம்'

செய்ய மறந்த
வேலையின் 'பயம்'

நேரம் இல்லாமையால்
பாதியில் நின்ற
வேலை பற்றிய
'வருத்தம்'

அவசர பணியினால்
திட்டமிட்ட பணியில் ஏற்பட்ட
இடையூறால்
விளைந்த 'கோபம்'

புதிய பணி
செய்ய வேண்டியதால்
வந்த 'தயக்கம்'

என மீள்சுற்று
இரவு படுக்கையில்...

## உன்னாலே...

நேற்றும்
இன்றும்
செய்த பணிக்கு
முடிவு தெரியவில்லையே?

முடிவு அறிந்தவையும்
சொல்லிக்கொள்ளும்படி
இல்லையே?

நாளைய பணிகள்
எப்படியோ?

என படுக்கையிலும்
யோசித்து
என்னை
வல இடமாயும்
இட வலமாயும்
புரளச்செய்து

உறக்க இரவுகளை
தொலைக்கச்செய்து

மறு நாளைக்கு
தயாராக
தேவையான
ஓய்வை தாமதப்படுத்துகிறாயே

என புலம்பல் கேள்வி
புத்திக்கு உடம்பிடமிருந்து

## சாப்பாட்டு புராணம்

கொதிக்க கொதிக்க
பொல பொல
சாதம் தட்டில்
பரிமாறப்படுகையில்
ஆவி சாதத்தை விட்டு
ஓடுவது

சிற்றுண்டிக்குப்பின்னே
அதிக டிகாஷனும்
கொஞ்சமாய்
பாலும்
சர்க்கைரையும்
கொண்ட சூடான
காப்பி வைக்கப்படுகையில்
அதன் மணம்

தோசையின்
மையப்பகுதியில்
எண்ணெய் குழைத்த
இட்லி பொடி வைத்து
சுற்றியுள்ள பகுதியை
சுவைத்து
நடுப்பகுதியை
நோக்கிய பயணத்தில்

நிறைய
இனிப்பும்
நெய்யும்
முந்திரியும்
ஏலக்காயும்
சூடான
சர்க்கரைப்பொங்கல்
காட்டப்படுகையில்
அதன் வாசனை

இத்தனையும்
ருசிக்கும் முன்னே
சுவை மொட்டுக்களை
தயார்படுத்துவதாய்...

## அப்படியே..

நேற்றைவைகளிலும்
இன்றையைவைகளிலும்

நிகழ்ந்த
சுவராஸ்யங்கள்
பிரமிப்புகள்
கலகலப்பு
நகைச்சுவை
சாதித்தவைகளை

அந்த கணத்து
உணர்வுகளோடு
மூளையின்
ஞாபக அடுக்குகளில்
சேமிப்போம்

அதை
ஒய்வு வயதில்
மீள் சுற்றாய்
உறவுக்கும்
நட்புக்கும்

அனுபவ பகிர்வு
செய்து
வாழ்வை
சுவராசியபடுத்திக் கொள்வோம்

மீண்டும் மீண்டுமான

விருப்பம் போல்
காலை விழிப்பு

தோணுகின்ற பொழுதெல்லாம்
காபி/ தேநீர்

சொன்னால் கிடைக்கின்ற
பிரிய உணவு

நேரக்கணக்கு வைத்து கொள்ளா
படுத்தபடி மோட்டுவளையை
பார்த்தபடி யோசிப்பு

காலம் இருப்பதால்
அதிக நேரம்
அலைபேசி பார்க்கும்
உவகை

ஞாயிறன்று ஒளிப்பரப்பு
ஆகும் தொலைக்காட்சி
சிறப்பு நிகழ்ச்சி பார்வை

இத்தனையும் வார விடுமுறையில்
அனுபவித்து விட்டு

செய்பணி இடம்
நோக்கி நகருகையில்

இப்படியே தொடரக்கூடாதா
என மீண்டும் மீண்டுமான

மனதின் புலம்பலுக்கு

வாரத்தின் ஒரு நாள்
என்பதால் தான்
இத்தனை நிறைவு
என
புத்தியின் தெளிவான
பதிலாய்

## உன் கையில் என்னை கொடுத்தேன்

தீர்ந்து போகும் என்றோ
இவ்வளவு தான் மொத்தமும்
என்றோ

சொல்ல முடியாதவர்

குடும்பமேன்மைக்கும்
செய்பணி சிறப்புக்கும்
தனித்திறமை வெளிப்படுத்தவும்

தனித்த பொழுதுகளில்
உன்னிடத்தில் என்னை
கொடுத்தேன்

யார் அவர்?

யோசிப்பு

## பின்

இலக்கு
தகுதி அறிந்த
பின்

செயல்
திட்டமிட்ட
பின்

அங்கீகாரம்
திறமை காண்பித்த
பின்

பக்குவம்
அனுபவம் பெற்ற
பின்

எதிர்பார்ப்பு
நம்பிக்கை கிடைத்த
பின்

மனிதம்
கருணை உண்டான
பின்

படைப்புக்கு
யோசிப்புக்கு பின்

## தெரியாமலேயே....

கால இடைவெளிக்குப்பின்
உறவின்
நட்பின்
சுவராஸ்ய பேச்சு
பழைய
உவகை நினைவு
பகிர்வுக்கு
இடையில்

அவரவர்
செய்தொழிலை
சில நிமிடங்கள்
சொல்வதை வைத்து

அவரைப்போல
இவரைப்போல
பணி தெரிவு
செய்திருந்தால்

இன்று
நாம் சந்திக்கும்
சவால்கள்
இருந்திருக்காதோ

என்ற
ஏக்கம்

அவரவர்க்கு உள்ள
சங்கடங்கள்
தெரியாமலே...

## அன்றும் இன்றும்

அன்று
பொழுது போக்கில்
பெரும் பங்கு வகித்த
திரைப்படங்கள்
காண விருப்பம்
இருந்தும்
பார்க்க இயலாமை

இன்று
கடைசியாய்
திரைப்படம்
பார்த்த ஆண்டே
நினைவில் இல்லாத

அளவுக்கு
நாட்டம் இல்லாமை

அன்று
வித விதமாய்
ஆடைகள் வைத்திருக்கும்
உறவையும்
நட்பையும்
காணுகையில்
நமக்கு வாய்க்கவில்லேயை
என்ற ஏக்கம்

இன்று
இவ்வளவு ஆடைகள்
நமக்கு எதற்கு
இதை எல்லாம்
எப்போது அணியப்போகிறோம்
என்ற அளவுக்கு
சலிப்பு

அன்று
தினு தினுசாய்
உணவு பொருள்கள்
உண்ண உணவகம்
செல்ல ஆசை

இன்றும்
நிறைய
வாய்ப்பிருத்தும்
நாட்டமின்மை

அன்று
சிறப்பான
கல்வித்தகுதியால்
வாழ்க்கை அட்டகாசமாய்
இருக்கும் என
நம்பிக்கை

இன்று
அது மட்டும்
போதாது
நிறைய
அனுசரிப்பும்
பொறுமையும்
ஒத்துழைப்பும்
சலிப்பின்மையும்

இலக்கு பற்றிய
தெளிவும்
செயல் முடிக்க
தொடர் திறமை
வளர்த்தல் தேவை
என்ற புரிதல்
கள யதார்த்தம்
தெரிந்த பின்...

ஆனா...

சுவராசியமாய்
பேசுவதற்கும்

சொன்ன சொல்லை
காப்பாற்றுவதற்கும்

திட்டமிடல்
துல்லியமாய் அமைந்தமைக்கும்

செயல் எண்ணியபடி
முடித்தமைக்கும்

முடிவுகள்
சாதகமானதற்கும்

தாராளமாய்

காற்றோடு கை குலுக்கிக்கொள்ளலாம்

தனக்கு தானே
தோள் தட்டிக்கொள்ளலாம்

மனது
வானத்தில் பறக்கலாம்

## ஆனா

அது எல்லைக்கோடு
வரை இருந்தால்
அதன் பெயர்
தன்னம்பிக்கை

எல்லைக்கோடு தாண்டினால்

இனி மேல் என்ன
என அலட்சியம் வந்து
அடுத்தவைகள்
கேள்விக்குறியாகும்

அதன் பெயர்
கர்வம்

## இதுக்கு அது மேல்...

நீண்டு கொண்டே
போகின்ற
முடிவுக்கான
காத்திருப்பில்
தோல்வி மேல்

கேட்டுக்கொண்டே
இருக்கின்ற
உதவிக்கு
பார்க்கிறேன்
என்பதற்கு
முடியாது என்று
சொல்வது மேல்

உழைப்பையும்
அர்ப்பணிப்பையும்
கொடுத்துக்கொண்டே
இருந்தும்
கண்டு கொள்ளாமல்
இருக்கையில்
வெளியேறுவது மேல்

உண்மையே
இல்லாமல்
நேரிடையாயும்
பிறரிடத்தும்
விமர்சிக்கப்படுகையில்
சேர்ந்து இருப்பதற்கு
ஒதுங்குவது மேல்

## ஆனால்...

எதிர்மறை
விமர்சனங்களை

கவனத்தில்
கொண்டு
சரி செய்து
கொள்ளத்தான்
வேண்டும்

ஆனால்

அதற்கு முன்

சொல்வது யார்
தகுதியானவரா
சொந்தமானாதா
இரவலா

புரிந்து தான்
சொல்லப்பட்டதா

கள யதார்த்தம்
கணக்கில்
கொள்ளப்பட்டதா

இந்த செயலுக்குரியதா

முன்னர் நடந்தவை
வைத்து
கொண்டுள்ள
எண்ணத்தாலா

செயல் பார்த்தா

தான் நினைத்து
நடக்கவில்லை
என்பதலா

அதிகாரம்
இருப்பதாலா

இருப்பை
காட்டிக்கொள்ளவா

கூட பணி செய்பவரின்
ஒத்துழைப்பு
கண்டுகொள்ளப்பட்டதா

மூன்றாம் மனிதரின்
தலையீடு உள்ளது
என உணரப்பட்டதா

வேண்டுமென்றே
சொல்லப்பட்டதா

இப்படி
நிறைய விசயங்கள்
உள்ளது

இறுதியாய்
விமர்சிக்கப்படுபவரும்
விருப்பு வெறுப்பற்று
விமர்சனத்தை
பார்க்க வேண்டும்

## அனிச்சையாய்...

பேசிக்கொண்டிருக்கையில்
பழைய விசயங்களை
நினைவு படுத்தியவுடன்
“ஆமா ஆமா'

நிகழ்வின்
விவரிப்புக்கிடையில்
'சரி'

நிகழ்வு பற்றிய
சொல்பவர் புரிதலும்
கேட்பவர் புரிதலும்
வேறுபடுகையில்
'இல்லை இல்லை'

சம்பவ விவரிப்பின்

முடிவில்
“சரியாய் போச்சு”

## அது என்னவோ

வார நாளின்
இறுதி நாளிலாவது
சொந்தமண் செல்லும்
ஆசையில் சரியாய்
பணி நேரம் முடித்தவுடன்
கிளம்புகையில்
குவியும் வேலைகள்

சோர்வால் உடல்
படுக்கை நோக்கி ஒடுகையில்
எப்போதாவது
ஆனால் அழைத்தால்
அலைபேசியை வைக்காதவரின்
அழைப்பு

அபூர்வமாய் குடும்பத்துடன்
வெளியே செல்கையில்
அந்த கணத்து உவகையை
அனுபவிக்க விடாமால்
இனம் புரியா
மனக்குழப்பம்

## மௌனம்

மனதுக்கு நெருக்கமானவர்களின்
மௌனத்தில்

பேசியது தவறோ
பேசாமால் இருந்தது சரியில்லேயோ

அவருக்கு பிடித்தவரிடம்
பேசாமால் இருந்து விட்டோமோ
அவருக்கு பிடிக்காதவரிடம
பழகியது காரணமோ

பிடிக்காததை செய்து விட்டோமோ
பிடித்ததை செய்யவில்லையோ

நம்மை பற்றி
மூன்றாம் மனிதரால்
தவறாய் சொல்லப்பட்டிருக்குமோ

அவருக்கு சரியான
புரிதல் இல்லையோ
உடல்நிலை சரியில்
லையோ
மனநிலை நன்றாக இல்லையோ
நிறைய கேள்விகள்
உள்ளுக்குள்ளே

உண்மைகள் வேறு விதமாயும்
இருக்கலாம் என தெரிந்தும்

## அதே பார்வையில்...

தவறான
பேச்சுக்கும்

கூடாத
செயலுக்கும்

வேண்டாத
கேலிக்கும்

கண்டனம்
சொன்னதால்

அதே பார்வையில்

வேண்டிய
தகவல்களையும்

எச்சரிக்கின்ற
விசயங்களையும்

குழப்பத்துக்கு
தீர்வு சொல்கையிலும்
இவர் சொல்லி
நான் என்ன கேட்பது
என்ற
வெறுப்பு மனநிலையிலும்
முன்அனுமானத்துடன்...

—

*A.S.* சுந்தரராஜன்,
மானாமதுரை.



---

# இதயங்களின் மொழி

நேசம் என்பது
நேரம்
காலம்
என்ற
எல்லைகளற்ற
ஒளி...
பரியந்தங்கள்
இல்லாத
பிரக்ஞை நிலை...
வரையறைக்குள்
வராத
உணர்வியல்...
அந்த
உண்மை
நேசத்தில்
விழுந்தவர்கள்
அலகுகளால்
அறிந்திட முடியாத
அளவிட முடியாத
ஆழத்தில்
உறைந்தவர்களாயிருப்பர்...
தொடமுடியாத
தூரத்தில்
வானோடு
நட்சத்திரங்களாய்ப்
புதைந்திருப்பர்...
அது ஒரு
தனிப்பிரபஞ்சம்!
இதயங்களின்
பாசை மட்டுமே
கேட்கும்
வனாந்தரம்!

## வேசம் தரிக்காத நேசம்

விரும்புபவர்களுக்காக
நிறைய செய்கிறோம்
மீண்டும் மீண்டும்

நேசம் கொள்கிறோம்
விரும்புபவர்களுக்காக
பார்த்துப்பார்த்து நல்லது புரிகிறோம்
நலம் விசாரிக்கிறோம்
மீண்டும் மீண்டும் விருப்பங்களை
வளர்த்துக் கொள்கிறோம்
அவர்கள் பிரியங்களில் பிரியம்
கொள்கிறோம்

ஆனால் நம்மை விரும்பாதவர்களுக்காக
ஏதேனும் செய்துவிட முடியாதா,
ஏதேனும் செய்து விரும்புதலை மீளப்
பெறக்கூடாதா,
என்றும்
எண்ணங்கள் தோன்றாமல்
இருப்பதில்லை

நம்மை விரும்பாதவர்களின்
தப்பெண்ணத்தை மாற்றம் செய்துவிட
முடியாதா,
நம்மை விளங்கிக்கொள்ளும்
நாள் வராதா,
என்றும்
மனதுக்குள் ஏங்காதவர்கள் இல்லை

முகம் திருப்பியவர்களை
முடிந்தவரை நம்பக்கம் ஈர்த்துக்
கொள்வதற்கான நல்லெண்ணம் அது
திரும்பவும் அவர்களை நம் பாதைக்கு
வரவழைக்கும் ஏக்கம் அது

என்றாவது ஒரு நாள் அது நிகழ்தல் கூடும்
ஒரு நாள் கூட நிகழாமல் போதலும்
கூடும்
ஆனாலும்
பிடித்தமானவர்களுக்கானதையே,
முகம் திருப்பிக் கொண்டவர்களுக்கும்
செய்வதில்தான் உள்ளத்தின்
அழகு இருக்கிறது.

யாரையும் ஏமாற்ற முடியாத
நேசத்தை வழங்குவதுதான்
மனிதம்..
வேஷம் தரிக்காத நேசத்தை
வெளிப்படுத்துவோம்
அவர்கள்
திரும்பி வரா விட்டாலும் கூட!

## பேரன்பின் மகுடம்

பெற்றவர் பேரன்பு பெறுதல் வரம்
பூமியில் பூத்திட்ட நேசத்தின் கரம்
பெய்த மழையின் தூய்மை பெறும்
புதிய மலராய் வாசனை தரும்

அன்னை தந்தையே முதலான முகவரி
ஆசைகள் துறந்த அன்பில் அரிச்சுவடி
இறைவனுக்கு அடுத்ததாய்ப்
போற்றிடவே நீங்கள்
இருவரும் எங்களின் இரண்டு கண்கள்

அன்னையின் உதரத்தில் உருவானோம்
கருவாய்
உதிரத்தைப் பாலாக்கி ஊட்டிட்டாள்
பருகவே
பாதங்களின் கீழ்தான் பவித்திரமான
சொர்க்கம்
அடைந்திடப் பணிவிடை
புரிவாய் நித்தம் நித்தம்

உயிரும் வாழ்வும் உவந்திட்ட பெற்றார்
ஒப்பற்ற உழைப்பில் மகுடம் பெற்றார்

எவ்வித பலனும் எதிர்பார்க்க மாட்டார்
உன்னத அன்பிலே விண்ணையே
தொட்டார்

உலகத்தைக் காட்டிய உன்னதம்
மனிதம்
ஊறில்லா இதயத்தில் அத்துணை புனிதம்
வாழ்த்திட எம்மிடம் வார்த்தைகள்
இல்லை

வானளாவும் புகழுக்கோ எல்லை
இல்லை

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

---

# நின்றாலும் நடந்தாலும் ஓடினாலும்

ஏன் பறந்தாலும் கூட
எங்கோ ஓர் இடத்தில்
எதிர்பாராத
அல்லது எப்போதென
எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
அந்த சந்திப்பு நிகழ்ந்து விடுகிறது

காலத்தில்
நேற்றிருந்தவர்களில்
இன்றில்லாதவர்கள் எத்தனை பேரோ

இன்றிருப்பவர்களில்
நாளையை பார்க்காமல்
மறைந்து போகிறவர்கள் எத்தனை
பேரோ

நிச்சயமில்லாத இந்த "நாளையின்"
மீது தானே
சுற்றிக் கொண்டிருக்கின்றன
நமது கோடான கோடி கனவுகள்...

கிடைக்காமல் போதல்
கிடைத்தல்
தொலைத்தல்
நிலைத்தல்
இப்படி எது நடந்தாலும்
யாரும் எதுவும் சீண்டாதவரை
யாரையும் எதையும் நாம் தீண்டாதவரை
இங்கு எதுவும் பிரச்சினையே இல்லை

ஐன்ஸ்டீனுக்கு தெரிந்த வரையில்
சார்பியலில் தான் இயங்குகிறது உலகு

"வெளியில் வா
நாம் தனித்து விட்டால்..."

நம்மை உலகோ
உலகை நாமோ
என்ன செய்துவிட முடியும்....

—

கி. கவியரசன்,
செங்கம், திருவண்ணாமலை.

# அன்பை விதைப்போம்

வஞ்சக எண்ணத்தில் வலைவிரிக்கும்
நஞ்செனும் மனதிலும் ஒட்டியிருக்கலாம்
நல்லதன் விதைகள்.
முகம்பார்த்து முன் ரசித்து
பின்விட்டுப் புறம் பேசும் உள்ளத்திலும்
உறைந்திருக்கலாம் உதவிடும் நேசம்.
பெண் பார்த்துப் பித்தாகி
வன்முறைக்குள் வழியமைத்து
வஞ்சியின் வாழ்வை புதைகுழிக்குள்
பொசுக்கிடும்
நயவஞ்சகனின் நெஞ்சிலும்
நிலைத்திருக்கும் தாய்ப்பாசம்.
கருவிக்குள் தன்னை தொலைத்து
காலத்தைத் தாண்டி ஓடும்
பணத்தைத் தேடும் இயக்கத்திலும்
பதுங்கியிருக்கலாம்
பாசத்திற்கான ஏக்கம்.
அவதூறுகளுக்குள்ளே ஆற்றலைத்
தொலைத்து
அடுத்தவர் நகர்வை அசிங்கப்படுத்தும்
அறம் தொலைத்தோரிடமும்
கவனிக்கலாம் ஒழுக்கத்தின் ஒளிவு.
நிம்மதியைத் தொலைத்திடும்
நெஞ்சமுள்ளோர் நிறைந்திருக்கும்
சமூகத்தின் பயணத்தில்
நிழலென அன்பை விதையுங்கள்
நெகிழ்ந்திடும் மனதின் வேர்வையில்
பிறந்திடக்கூடும் பேரன்பின் வாசம்.

## வழியைக் காட்டும் உழைப்பு

பொதுநலம் பேணும் ஓட்டமென
காந்தியின் அகிம்சை
எளியோனும் அரியணை ஏறிடும்
ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை நோக்கிய
அம்பேத்கரின் பயணம்
அடிமையின் மனத்திற்குள்
அனலென தேசப்பற்றை விதைத்து
ஆயுதம் நீட்டியாவது
விடுதலைக் காற்றை சுவாசிக்க
வாளேந்திய நேதாஜியின் வேகம்
உள்ளத்திலும் தேசத்திலும்
வீரமும் விவேகமும்
எழுச்சியும் சமத்துவமும்
விதையென முளைத்திட
எழுத்தால் எழுந்து நின்ற பாரதியின் தீரம்
முதலாளித்துவத்தின் கரத்தில்
தொழிலாளியின் எண்ணத்தைக் கூட்டி
ஆலைகளை உயர்த்திக் கட்டிய நேருவின்
தொலைநோக்குப்பார்வை
வசதிகளற்ற கிராமத்திலும்
எண்ணற்ற கருவிகளைக் கண்டறிந்து
பொருளாதாரத்தை மேம்படுத்திய
நாயுடுவின் தேடல்
தொழில்நுட்பங்களே எட்டாது
தொலைவில் நின்ற போதும்
திறமையில் வைத்திட்ட நம்பிக்கையில்
தேசமெங்கும் அணைகளை எழுப்பிய
விசுவேசுவரய்யாவின் அறிவியல் பார்வை
கல்வியில் கிடைக்காத போதும்
அனுபவத்தில் பெற்றிட்ட
அறிவுத்திறத்தால் வறுமையின் பிடிக்குள்
வறண்டு கிடந்த
எதிர்காலத்தை பள்ளிகளால்
மீட்டெடுத்த

காமராசரின் யதார்த்தப்புலமை
பிஞ்சுகளின் மூளைக்குள்
கனவுகள் உருவாகிடத் தூண்டி
காணும் செயலெங்கும் அறிவியலைக்
கண்டுதெளிந்திட
போகுமிடமெங்கும் எதிர்காலத்தை
நேர்மறைப் பார்வைக்குள்
உருவாக்கிய கலாமின் உற்சாகம்
காட்டிய வழிகளில் புதைந்திருக்கும்
உழைப்பின் மேன்மையை
உணர்ந்தோர் உலகின் திசையெங்கும்
உயர்ந்தோராய் மாறலாம்.

## சிறகு விரிக்கும் கனவு

உழைப்பின் கரம் பிடித்து
முயற்சியின் பாதையில் கால் பதித்து
நம்பிக்கையின் நல்பலத்தில்
நடப்பவை யாவும் நல்லதென்ற
நேர்மறைச் சிந்தையில் நுழைந்து
வாழ்வெனும் வானத்தில்
விரித்திடும் சிறகுகளுக்கு
இயக்கமென உந்துகிறது
எப்போதும் பூக்கும் கனவுகள்.

## அன்பை அறுவடை செய்

முள்சூழ மலர்ந்தாலும் வீசும்
மணத்தாலும்
விரியும் புன்னகையாலும்
இன்முகத்தைப் பெருக்கிவிடும் மலரின்
வாழ்வென
மனதினில் பெருக்கிடு அன்பெனும்
அமுதம்.
தடையெனவே தடுத்தாலும் தடுமாறாப்
பாதையிலே
சித்தம் கலங்கிடாது
நடைபோடும் வரிசையிலே
எறும்பின் திறனென
எப்போதும் சேமித்துவை
இதயத்தில் இரக்கத்தை.
மேனியிலே. வெட்டும் குத்தும்
விழுந்தாலும்
பள்ளம் மேடுகளென பாத்திகளில்
பிரிந்தாலும்
புதையலைப் பரிசளிக்கும்
பூமியின் பொறுமையென
பரிசளிப்பாய் பகையாளிக்கும்
அன்பின் குணத்தை.
இடியும் மின்னலும் பிளந்திடும்
சோதனையில்
எப்போதும் நிலைகுலையாது
தன்னையே உருகவைத்து தரணியின்
தாகத்தை
தணிக்கின்ற மேகத்தின் தியாகத்தின்
எல்லையென
உணரவைப்பாய் காணும்
யாவருக்குள்ளும் பேரன்பின் பிரியத்தை.
குருதியிலே உயிர் வளர்த்து
கொடையெனவே பிரசவம் காட்டி
பிள்ளையினைப் பேணுகின்ற
தாய்மையின் தன்னிகரற்ற கடமையென
எண்ணத்தில் நிறைத்துவை
அழியாத கருணையினை.
அளவிலாக் குப்பையினால் அகமெலாம்
மூடினாலும்
வீணாகும். கழிவெல்லாம் கால்வாயில்
கலந்திட்டாலும்
புறத்தைத் தூய்மையாக்க புதுவெள்ளம்

பாய்ச்சி
காணும் நிலமெங்கும்
பசுமையினைப் பிரசவிக்கும்
நதி போல
நகர்தலில் விதைத்திடுக நல்லதொரு
அன்பின் உலகத்தை.
ஓட்டத்தை உடன்வாங்கி
கதிரோனின் நேரத்தை
காட்டுகின்ற காலமென
மனங்களிலே மாண்புகளை மதிப்பாக்கும்
மகிழ்வுடனே
கருணையினைச் சுரக்கின்ற கண்களில்
மிதந்து
பேரன்பை தவமெனப்
பிரியத்தில் பெற்றிட்டால்
நகரும் வாழ்வினிலே நாளும்
உடன்வைத்து
அன்பினைச் சுமக்கலாம்.
இத்தரை மீதினில் இன்முகம் கூட்டி
எத்திசையும் இசைகின்ற ஏற்றம் கண்டு
முத்திரை பதியும் முயற்சியிலே முன்னேறி
முகமெலாம் அன்பையே செய்திடுவோம்
அறுவடையாய்.

## அன்னதானம்

ஆங்கோர் ஏழைக்கு உணவிடும் அற்புதம்
தாங்கிடும் நற்செயலின் தலையாயதென
ஓங்கிய புகழ் கண்ட பாரதியின் கூற்றில்
இங்கிவர் அளித்திடும் தானத்திலே
அறமும் அன்பும் கருணையும்
நிறைந்திடின்
வற்றிய வயிறுகளுக்குள் வாழ்வென
இறங்கும்
அன்னத்தின் உயிர்ச்சுவை அமுதென
மாறிடும்.
நம்பிக்கை வைத்தே காத்திருக்கும்
ஏழைகளுக்கு
இன்னும் முழுமையாய் எட்டாத
உணவின் தேவையை
அன்னதானம் நிறைத்திட வருகையில்
வாழ்த்திடும் மனங்களின் வழியே
தென்படக்கூடும் தெய்வங்கள்.

## வீழ்வேனென்று நினைத்தாயோ?

அறத்தைப் புறம்தள்ளி அவலத்தை
ஏந்தியபடி
சூழலைக் காத்திடாது தன் சுகத்தில்
இளைப்பாறி
ஊழலை வளர்த்திடவே ஊதுகுழலாக
மாறி
கடமைகளைச் கண்ணுறாது களிப்பிலே
மனம் வைத்து
உடைமைக்குத் தருகின்ற முன்னுரிமை
போற்றி
மடமையெனத் தெரிந்தும் மாறிடாது
தொடருகின்ற
மனிதப் பதர்கள் பெருகிவர
பெண்ணுக்குத் தொல்லை தந்து
பிதற்றுகின்ற கூட்டம் நிறைய
போராட்ட குணங்களையே
மறந்துவிட்டு
போதையிலும் கவர்ச்சியிலும் புதைந்து
போன
இளைஞர் படை கண்டும்
இரக்கமற்ற கல்நெஞ்சமென
நின்றிடாமல்

காணும் மனமெங்கும் பேரன்பை
விதைத்திடாமல்
வீழ்வெனென்று நினைத்தாயோ?

## போன்சாய் மரத்தில் பூத்த காலம்

அனுபவங்களின் வளர்ச்சியில்
ஆளுமையானபின்னே
முதுமையின் தடத்தில் முயற்சிக்கும்
பெரியோரின் பாதைக்குள்
எட்டுவைக்கக்கூட நினைப்பில்லாது
கையில் அலைபேசியுடன் சுற்றுகிறது
இளமையின் துள்ளல்.
சகிப்பற்றும் சலிப்புற்றும் தனக்குள்
தானே
பொறுமையைத் துறந்தும்
முணுமுணுத்துத் திரியும் எரிச்சல் மனதில்
விதைகளைத் தூவிட நீளும் கரங்களை
நேசிப்பதில்லை உலகின் ஓட்டம்.
கூட்டுத் தனத்தில் கோபமும் வெறுப்பும்
இளைப்பாறிக்கொள்ள மனங்கள் ஏந்தின.
யாருமற்ற தனிமையில் வீடெங்கும்
வெறுமையைக் காணும்
போன்சாய் மரமென பூக்கிறது ஒற்றைப்
பிள்ளையின் ஓயாக் கனவுகள்.
நடை வண்டி ஓட்டாது நாலு சக்கர
வாகனப் பயணம்
தடை கண்டால் தாண்டாது தவித்திடும்
தருணம்
இடையூறுகளுக்குள் ஏற்றுக்கொள்ளாத
பக்குவமென
சோலைகளில் பூக்காத மரங்களைப்
போல
இல்லமெங்கும் போன்சாய் மரமெனப்
பூத்திடும் காலத்தில்
அவரவர் பயணத்தில் அவரவரே
ஆண்டவராகலாம்.

## வெயிலின் வாழ்வு

பருவத்தேடலுக்குள் புகுந்தபடி
பாலையைப் பெரிதாக்கும் பண்டிதத்தில்
சாலையெலாம் சுவடுகளை
அழித்துவிட்டு
பொழியும் மரங்களின் இலைகளைப்
புசித்தபின்னும்
ரத்தத்தேடலுக்குள் வேகத்தைப் பாய்ச்சி
வேர்வையின் வழிதலை அருவியாக்கி
நாக்கும் உடலும் தீக்குள்
நுழைந்தவிட்டதென
தாகத்தேடலுக்குள் தம்மைத் தொலைக்க
வெளிச்சத்தைக் கூட்டாமல்
வெப்பத்தை எரிய விட்டு
உலகப் பரப்பெங்கும்
ஏப்பத்தை அதிகரிக்கும் வானத்தின்
நகராப் பாதைக்குள்
உயிரையே துண்டுதுண்டாக்கி
ஒப்படைக்கும் வேதனைக்குள்
உலவிடும் மனிதனுக்கு
வாய்ப்பைத்தான் வழங்குகிறாய்
பூமிச்சுழற்சியின் பயணமதில்
வாழ்வின் வெளிச்சத்தை
வழக்கமாக்கிடும்
வெயிலின் வாழ்வை
வீரியமாக்கி
நெருப்பைக் கக்கவைத்திடும்
பேராசை மனிதனுக்குள்
பிறந்திடும் ஞானமே

உயிரின் வாழ்வுக்கும் ஒளியேற்றலாம்.

சாதனைகளைச் சந்தித்த தருணங்களில்
வெற்றிக் கோப்பைகளை
கையில் ஏந்துகிறேன்
மகிழ்ச்சி மழை எங்கும் பெருகி நிற்க
மமதையில் தள்ளாடுகிறேன்.
வேதனைகளாக விளைந்து நிற்கையில்
வெற்றுக் கோப்பை
என்னை ஏந்துகிறது.
எனக்கான சுதந்திரம் பறிக்கப்பட்டது.
என் குடும்பச் சித்திரம்
பொசுக்கப்பட்டது.
சமூக இருப்பு உருட்டி
விளையாடப்பட்டது
துணை நின்ற தோழமையும்
தூவென துரத்தப்பட்டது.

இத்தனை அழிச்சாட்டியும் செய்த
பின்னும்
நெருப்பு என்னுள் நீரென இறங்கியது.
என்னை முற்றிலும்
கரைத்து முடித்த பின்
உலகத்தைக் கரைக்க
திறந்த வாய் கொண்டு
உருள்கிறது மது.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# மாற்றி யோசிப்போம்

எங்கே செல்கிறது எமது வாழ்க்கை ?
எதனை நோக்கியவாறு எமது பயணம் ?
மனிதன் பிறப்பும் இறப்பும் எதற்காக ?
அதில் வாழ்க்கை என்பது எதற்காக ?

வாழ்க்கை என்னவென்று காலம்
சொல்லும்
வாழ்ந்தது என்னவென்று உலகம்
சொல்லும்
மனிதன் வாழ்வதோ குறைந்த காலம்
வாழ்க்கையை மறுப்பது என்ன நியாயம் ?

உலகில் வாழ்க்கை என்பது வாழ்வதற்கு
எமது வாழ்வால் உலகம் சிறப்பதற்கு
வாழ்க்கை என்பது ஒரு முறையே
வாழட்டும் என்றும் தலைமுறையே..

அழகாய் பூக்கள் பூத்தாலும் - என்றும்
அதன் வாழ்க்கை என்பது சிறப்பாகும்...
நாளும் - விடியல் என்பது புதிதாகும் ..
பிறக்கும் நொடிகள் யாவும் புதிராகும் ..
வீசும் காற்று என்றும் புதிதாகும்..
பேசும் பேச்சு என்றும் புதிதாகும்..

நேற்று என்பது கடந்தாலும் - இங்கு

உலகில் இன்று என்பது நிலையாகும்.
நினைவில் - நாளை என்பது புதிதாகும்.
வாழ்வில் இலக்கு என்பது முடிவானால்
அழகாய் - வாழ்க்கை என்பது புதிதாகும்
...

எமது வாழ்க்கை சிறப்பாய்
இல்லையென்றால்
வாழ்வில் ஏதோ ஒன்று குறையாகும் -
அதற்கு
மனதில் மாற்றம் ஒன்றே மருந்தாகும்...
வாழ்க்கை சிறக்க வேண்டுமென்றால் -
உடனே
மனதில் மாற்றம் ஒன்றே வழியாகும்...

--

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

---

# சிறுசேமிப்பு

அலுவலகத்தில் இருந்து
வீட்டிற்கு வந்த அப்பா
தன் எட்டு வயது மகன்
அன்புவை அழைத்துக்
கொண்டுப் பொங்கலுக்கு
துணிகள் வாங்க
ஜவுளிக்கடைக்குள்
சென்று தேவையான
துணிகள் வாங்கிவிட்டு
பில்போடும் இடத்தில்
பணத்திற்கு பதில்
தன் கையில் வைத்திருக்கும்
ஒரு கார்டை எடுத்து
கொடுத்து பணம்
செலுத்திவிட்டு,
சிற்றுண்டி உணவு
முடித்தப் பின் அந்த
ஹோட்டலிலும் பணத்திற்குப்
பதில் கார்டையே
பயன்படுத்தியதும்,
பிறகு காருக்குப்
பெட்ரோல் நிரப்பும்
இடத்தில் கார்டைப்
பயன்படுத்தியதும்,
பிச்சையெடுக்கும்
அந்த பாட்டிக்கும்
காசுக் கொடுக்காமல்
அட்டை மூலமே பணம்
செலுத்தி உணவு
வாங்கிக் கொடுத்ததும்,
பணமே கையில் இல்லாமல் அப்பா
செலவு செய்கின்றாரே....
என ஆச்சரியமடைந்த
அன்புக்கு ஒரே சிந்தனை....
இன்று பள்ளியில்
ஆசிரியர் கூறிய
சிறுசேமிப்பிற்கு
அப்பா பணம் எப்படிக்
கொடுப்பார்.
அதுவும் உண்டியலில்
தினம் தினம் பணம்
சேர்ப்பது எப்படி?
எனக்கும் கார்டையே

கொடுத்துவிடுவாரோ?
என்று யோசித்துக்
கொண்டிருந்த அன்பு,
தன் அப்பாவைப் பார்த்து,
அப்பா என் ஆசிரியர்
சொன்னது போல
நானும் சேமிக்க வேண்டும்.
அதற்கு நீங்க எனக்கு
காசுக் கொடுக்க வேண்டும். இந்தக்
கார்டு
எல்லாம் எனக்கு
வேண்டாம் எனக் கூறி,
மேலும் நீங்கள் உங்கள்
வருமானத்தில் செலவு
செய்தது்ப் போக
மீதியை சேமிக்கின்றீர்களா?
அல்லது
சேமித்ததுப்போக
மீதியை செலவு
செய்கின்றீர்களா?
எனக் கேட்ட
அன்புவை பார்த்து
பேசுவதறியாது
தவித்தார் எண்ணியல்
தந்தை பார்த்திபன்.

—

மு. ஜெரோஷா,
எழுத்தாளர்.

---

# கட்டைவிரல்

நடைபயின்ற போதெல்லாம் அப்பாவின்
கால் சுற்றும் பூனையானேன்
கைப்பிடிக்காய்..!
கைக்குட்டையும் கட்டைவிரல் ஆனது
பள்ளி முதல் நாளில் இருந்து !!!

சனிக்கிழமை முதலே ஆவலாய்
காத்திருப்பேன் ஞாயிற்றுக்கிழமைகளில்
எல்லாம் உன் கை பிடித்து ஊர் சுற்றும்
ஆவலில் !!!

ஊர் சுற்றிய தார்ச்சாலையில் கம்பீர
தோரணையில் அரசியாய்
நடப்பதெல்லாம் அந்த ஒற்றை
கட்டைவிரல் பிடிப்பில் தான் !!!

முதல் முறை உன் இமைகள் வடிக்கும்
துளிகளின் சுமை உணர்ந்தேன்,
கைப்பிடித்து இன்னொருவர் கரம்
ஒப்படைக்கையில் உனக்கும் வலிக்கும்
என்று !!!

ஒன்று மட்டும் நிதர்சனம் கைப்பிடியை
மாற்றினாலும் அந்த கட்டைவிரல்
ஞாபகம் மாறாது !!!

- கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்.
கேரளா.

# எங்க ஊரு மழையிலே...

சின்ன சின்ன ஊரிலே
எங்கள் வீட்டுத் தோட்டத்தில்,

அகவும் மயிலும் ஓடி வந்து ஆட்டந்தான்
போட்டுகிச்சாம்!

மயிலாடும் ஆட்டத்திற்கு
குருட்டு காக்கா பாடிகிச்சாம்!

மயிலாடும் ஆட்டம் காண,
மின்னலும் தான் வந்துகிச்சாம்!

மின்னலின் தங்கையாம்
இடிமுழக்கம் கேட்டுகிச்சாம்!

மலர் நிறைந்த செடிகளும்,
அழகாய் தலை ஆட்டுக்கிச்சாம்!

சின்னஞ்சிறு பறவைகளெல்லாம்,
வண்ண ஆட்டம் போட்டுகிச்சாம்!

கன்னங்கருமேகம் கண்
சிமிட்டி புழிஞ்சிகிச்சாம்!

ஆடுகளும் மாடுகளும்
மழையிலே நனஞ்சிகிச்சாம்!

சிறுவர்களெல்லாம் ஓடி வந்து,
மழையை கையில் பிடிச்சுகிச்சாம்!

அம்மாவின் குரல் கேட்டு,
அவர்களெல்லாம் பதுங்குகிச்சாம்!!

--

எம். என். பாஸ்கரன்
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு)
மன்னார்குடி.
அலைபேசி: +91 9942949883



---

# முகமூடி

முகமூடியில்லா உலகில்
வாழும் வரம் கேட்கிறேன்
உன் முகமூடியைக்
கழற்றிவிட்டு வரம் கேள்
யாருமில்லா தனித்தீவிற்கு
அனுப்பி வைக்கிறேன்
என்கிறார் கடவுள்
தன் முகமூடியை
கழற்றியவாறே...

## சுதந்திரம்

சுதந்திர தினம்
உயிரியல் பூங்காவில்
அலைமோதும் கூட்டம்
கூண்டுக்குள் விலங்குகள்

## ஆசை

உதிர்க்க உதிர்க்க
துளிர்த்துக்கொண்டே இருக்கின்றன
ஆசையிலைகள்

## பற்று

பற்றுதலை விடும்போது
இலேசாகிறது யாக்கை
போதிச்சருகு போதித்தது

## நீ......ளும் காத்திருப்பு!

இரண்டாயிரம்
ஆண்டுகளைத் தாண்டி
காத்துக் கிடக்கின்றன
போதிமரங்களை
வெட்டிச் செய்த
சிலுவைகள்
இன்னொரு புத்தருக்காகவும்
இயேசுவுக்காகவும்...

— பா. சிவகுமார்

---

# கல்வி

விளைச்சல் நிலம்
விற்றுக் கொண்டிருந்தான்
கல்விக் கட்டணம்

தடுமாறிக் கொண்டிருந்தான்
விலைக்கு கிடைக்கவில்லை
தேடும் கல்வி

கசங்கிய ஆடைக்கு
எட்டாக் கனியானது
இன்றையக் கல்வி

கசங்காத ஆடைக்கு
எட்டும் கனியாகி
தேடி வந்தது

கனவு காண்கிறான்
கனவாகவே தொடர்கிறது
கல்வி கேள்விக்குறியாகிறது

—

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

# துப்புரவுத் தொழிலாளி

நாற்றம் பொதிந்த
குப்பைகளோடு சேர்த்து
தன் மேல்
ஏளனப் பார்வை வீசிய
மனித முகங்களையும்
கூட்டிப் பெருக்கித்
தள்ளுகிறான்
துப்புரவுத் தொழிலாளி

- நிவேதிகா பொன்னுச்சாமி

# அவளதிகாரம்

நீண்ட நேரமாக பார்க்கிறேன் அவளின்
காதோர முடியினை எந்த
அளவுக்கருவியில் அளப்பதென்று...

தினம் ஆடும் லோலாக்குகளில் நான்
தொங்கி தொலைவதுக்குள் இரவு
வந்துவிடுகிறது••• லோலாக்கை பிறகு
பார்ப்போம்...

திடிரென கட்டியனைக்கும் அவளிடம்
"அடுக்குத்தொடர்" வசனங்கள் மறந்து
போயின அவள் இரட்டைக்கிளவி
இதழ்முன்...

ஆஃபடர் டென் பி எம் என்று அடிக்கடி
கூறுபவன் நான் இன்று ஏ எம் என
மாறிவிட்டது••• யாரும் இல்லாத
தனிமை சூழலில்...

மகளின் கூந்தலை உதறி அள்ளி முடிக்கும்
பொழுதெல்லாம் அவள் குளித்து முடித்த
சொட்டுக்கள் தான் உன்னை
உலர்த்துகின்றன... கொடுத்து வைத்தவன்
தானே அவள் கணவன்...

அடிக்கடி கட்டை விரலை என் பக்கம்
நீட்டி கொடுத்து வைத்தவன் டா நீ
என்பேன்...
அவளின்
அந்த கொடுத்து வைத்தவன் நான்தான்...

— கவிஞர் சே. கார்கவி.

---

# யாரோ பறித்த பூவை நீ

தருகின்ற
பேரன்பில் பாசத்தோடு
தலை குனிகின்றன
என் தோட்டத்துச் செடிகள்.
/

உன் பூப்போட்ட குடையை
ரசிப்பதற்கென்றே
மழையாய் அவதரிக்கிறது
முகில் கூட்டம்.
/

நீ பார்த்த
கடைக்கண் பார்வைக்கு
என் தலைக்கு மேல்
ஒளிர்கிறது ஒளிவட்டம்.
/

தானிட்ட பொட்டுக்களை
தானே வழித்தழிக்கும்
மழை.
/

என்னிடத்தில் இருந்தபடி
நீயும்;
உன்னிடத்தில் இருந்தபடி

# நானும்; இருவரும்

ஒருவரான நாளில்
எல்லாமும் சாத்தியம்.
/

விளக்கேற்றுகிறேன்
பயம் போய் இருக்கலாம்.
அறையினுள் தனியாய்
இருந்த இருட்டுக்கு.
/

இருட்டில் இருக்கிறேன்
உற்றுப்பார் நிழலாய்
தெரியலாம் நான்.
/

கவிழ்த்துப் பிடித்த
பூவிலிருந்து; துளியும்
சிந்தவில்லை தேன்.
/

சொல்லியதைத் திரும்பத்
திரும்பச் சொல்கிறேன்
நான் மறந்தாலும்;
நீ மறக்கக்கூடாதென்று.
/

நிர்வாணத்தை விரும்புவர்கள்
யாராக இருந்தாலும்
இருட்டை நேசித்தாக வேண்டும்.
/

நான்...
மௌனம் அணிந்து வரும்
வேளையில்;
பூக்களைத் தருகிறாய்.
கோபம் சுமந்து வரும்
வேளையில்;
புன்னகையைத் தருகிறாய்.



—
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.

மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு,
சிங்கப்பூர்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.